தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அறிவிப்புகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 17-2-79 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 19-2-79 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 20-2-79 செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஓர் இடத்திற்கு மேற்படுமாயின் 22-2-79 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினை.

மத்திய அரசு அனுப்பிய அறிக்கை தமிழில் இல்லாதது குறித்து.

*திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் சட்டமன்றத் துறை மூலமாக "Guidelines for signing verification certificates for Passports" என்ற குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது ஆங்கிலத்திலும்

இந்தியிலும் தான் இருக்கிறது. நான் அதை இங்கே கிழித்துக்கூட போடலாம். இருப்பினும் ஜனநாயக மரபு காரணமாக அப்படிச் செய்யவில்லை. நான் இந்த அரசாங்கத்தின் கொள்கை-ஆங்கிலம் இந்தி மட்டும்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மத்திய அரசால் அனுப்பப் பட்டதை அப்படியே கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. துரை முத்துசாமி : இந்த அரசின் கொள்கையை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசு என்னென்ன குறிப்புகளை இங்கே அனுப்புகிறார்களோ அதை அப்படியே சட்டமன்ற துறை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பு வேண்டும் என்று சொன்னால், அரசிடமிருந்து பதில் பெற்று தர முடியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசின் கொள்கை இனிமேல் தெரிவித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் நிச்சயமாக இல்லை. இந்த அரசின் கொள்கை, தமிழும், ஆங்கிலமும் தான் என்பது தெளிவாக்கப்பட்டு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : அரசின் கொள்கை ஆங்கிலமும்-தமிழும் தான் என்றாலும், எங்களுக்கு அளிக்கப்பட்டது ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருப்பதால், என்னைப் போன்றவர்கள் புரிந்துகொள்கிற வகையில் அதைத் தமிழிலே இனிமேலாவது அச்சிட்டுக்கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினரின் உணர்வுகளை நானும் உணர்கிறேன். மத்திய அரசு அனுப்பியதை அப்படியே கொடுக்கிறார்கள். உறுப்பினர்களுக்குத் தமிழில் வேண்டும் என்றால், மொழிபெயர்த்துக்கொடுக்க ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன்.

(3) அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".